# ராவ் சாகேப் மு.ஆபிரகாம் பண்டிதர்

**தஞ்சை**

செந்தமிழ் சான்றோர், ஆன்ற பேரறிஞர், இன்னிசை வளர்த்த இசை மாமேதை, சித்த மருத்துவச் செம்மல், இயற்றமிழ் புலவர், அருளும் பொருளும் அறிவும் உழைப்பும் அன்பும் பண்பும் ஒருங்கமைந்த பெருந்தகையாளர், இறைவன் இயேசுவின் அடியார், எளிய குடும்பத்தில் தோன்றி இறையருளாலும், இடையுறா உழைப்பாலும் உயர்ந்தோங்கி, உலகு பயன்கொள்ள வாழ்ந்த உத்தமர் ராவ் சாகேப் மு.ஆபிரகாம் பண்டிதர் அவர்கள்.

**இளமைப் பருவம்**

1859-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் இரண்டாம் நாளில் முத்துச்சாமி நாடாருக்கும் அன்னமாள் அம்மையாருக்கும் திருநெல்வேலி மாவட்டம் தென்காசியை அடுத்த ‘‘சாம்பவர் வடகரை’’ என்னும் சிற்றூரில் ஆபிரகாம் பிறந்தார். முத்துச்சாமி நாடாரும் அவரது மனைவியாரும் பங்களா சுரண்டைக்கு வந்து அங்குள்ள ஆங்கில பாதிரியாரிடம் தோட்டக்காராக பணியாற்றினார். ஆபிரகாம் பண்டிதர் தமது ஆரம்பக் கல்வியை சுரண்டையில் பயின்று, திண்டுக்கல்லில் உள்ள நார்மல் ஆசிரிய பயிற்சி பள்ளியில் ஆசிரிய பயிற்சி பெற்று முதன்மையாகத் தேறினார். பின்பு அங்கேயே ஆசிரியராகப் பணியாற்றினார். ஓய்வு நேரங்களில் பல நூல்களைப் படித்து தமது அறிவை விருத்தியாக்குவதில் ஆர்வம் கொண்டார்.